**இலங்கை பொறியியல் பேரவை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பொறியியல் பேரவையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரவையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான

வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- பேரவையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

---

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

**1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியல் பேரவைச் சட்டம் | | | |
| (i) சட்டத்தின் 12 ஆம் பந்தி | பொறியியல் தொழிலில் உள்ளோரின் தொழிலை தவறாக பயன்படுத்துவதற்குரிய ஏதாவது விடயங்கள் தொடர்பாக விசாரணை நடாத்த வேண்டியிருந்த போதிலும் பொறியியல் தொழிலில் ஈடுபடுகின்றவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தவறுகளை ஒழுங்குபடுத்துவதற்காக இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொழிலை தவறாக பயன்படுத்துதல் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடாத்துதல் தொடர்பான செற்பாடுகள் சட்டரீதியான வரையறைக்குள் மேற்கொள்ளப்படல் வேண்டும். எதிர்காலத்தில் சட்டரீதியான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் வெளிப்படையாகவும், செயற்திறனாகவும் மற்றும் நடைமுறைரீதியிலுமான செயல்நடைமுறையொன்றைத் தயாரிப்பதற்கு ஆழமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இந்த செயல்நடைமுறை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் முழுமையான செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்படும் நிலையில் உள்ளது. | சட்டத்திற்கு இணங்க செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) சட்டத்தின் 14 ஆம் பந்தியின் 15 ஆம் மற்றும் 18 ஆம் பிரிவுகள் | பொறியியல் தொழிலில் உள்ளோராக பதிவுசெய்தால் தவிர அந்த பொறியியலாளர் பொறியியல் தொழில் தொடர்பான நடவடிக்கைகளில் | IESL மற்றும் IIESL நிறுவனங்களின் அங்கத்தவர்கள் பொறியியல் பேரவையில் பதிவுசெய்தல் அவர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாக | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படுதல் வேண்டும். |

ஈடபட முடியாது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினதும் (IESL) மற்றும் இலங்கை கூட்டிணைந்த பொறியியலாளர் நிறுவனத்தினதும் (IIESL) தொழிலிலுள்ளோர் முறையே 20,248 மற்றும் 8,000 ஆக இருந்த போதிலும் பொறியியல் பேரவையில் தொழிலில் உள்ளோர் 17,757 பேர் மாத்திரம் பதிவுசெய்திருந்தனர். அது தொடர்பாக தொடர்புடைய தரப்பினருக்கு அறிவித்தல் மற்றும் பதிவுசெய்யாமல் பொறியியல் தொழிலில் ஈடுபடுகின்ற நபர்களைக் கண்டறிவதற்கு முடியுமான பொறிமுறையொன்று தயாரித்து அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இருந்ததுடன் அதற்காக பொறியியல் பேரவைக்கு நேரடியாக அச்சுறுத்த முடியாது. அவ்வாறே சில அங்கத்தவர்கள் வெளிநாடு சென்றிருந்ததுடன் மேலும் அங்கத்தவர்களில் சிலர் பொறியியல் தொழிலில் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடாதிருந்ததாகவும் அறிவித்துள்ளனர். பதிவுசெய்யாமல் பொறியியல் தொழிலில் ஈடுபடுகின்ற நபர்களை இனங்காண்பதற்கு எங்களின் இணையதளம் மூலம் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பொறியியல் பேரவையின் பதிவு இலக்கம் அல்லது IESL, IIESL நிறுவனங்களின் அங்கத்துவ இலக்கத்தை இணையதளத்தில் உள்ளடக்குவதன் மூலம் அவர்கள் பதிவுசெய்துள்ளனரா என பொதுமக்களுக்கு அறியக்கூடியதாக இருக்கும். மேலும் பதிவுசெய்துள்ளோரின் பெயர்ப்பட்டியல் இணையதளத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் IESL மற்றும் IIESL நிறுவனங்களுடன் கலந்துரையாடி பதிவுசெய்யாமல் பொறியியல் தொழிலில் ஈடுபடுகின்றவர்களின் அங்கத்துவத்தை பதிவுசெய்வதற்கு முடியுமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | சட்டத்தின் 25 ஆம் பிரிவு | பதிவாளரால் இந்த சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இதன் கீழ் வழங்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கும் இணங்க சட்டத்தின் “ஆ” பட்டோலையில் குறிப்பாகக் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிக்கு இணங்க பொறியியல் தொழிலில் உள்ளோரின் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட வேண்டியிருந்த பொதிலும் பொறியியல் பேரவை மூலம் பேணிச்செல்லப்படுகின்ற அங்கத்தவர் பெயர்ப் பதிவேட்டில் மேற்கூறப்பட்ட மாதிரியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அங்கத்தவர்களின் முகவரி, பதிவுசெய்த திகதி மற்றும் பதிவுக் கட்டணம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியல் தொழிலில் உள்ளோரின் பெயர்ப்பதிவேட்டில் இலத்திரனியல் தபால் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சகல பொறியியல் தொழிலில் உள்ளோரின் தொகுதிக்கான அங்கத்துவக் கட்டணம் ஒன்றாக இருந்ததுடன் பதிவு செல்லுபடியாகும் திகதி பதிவுசெய்துள்ள பொறியியல் தொழிலில் உள்ளோரின் மீளாய்வாண்டிற்குரிய பெயர்ப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கத்தவர்களின் முகவரி, பதிவுசெய்த திகதி மற்றும் பதிவுக் கட்டணம் என்பவற்றை பொறியியல் தொழிலில் உள்ளோரின் பெயர்ப்பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | சட்டத்தின் 41 ஆம் பிரிவு | பொறியியல் தொழிலில் உள்ளோரை 06 தொகுதிகளின் கீழ் பதிவுசெய்வதற்கு பொறியியல் பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதன் கீழ் கொண்டுவரப்படுகின்ற பொறியியல் தொழில்நுட்பவியலாளர்களை பேரவையில் பதிவுசெய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறியியல் தொழிலில் உள்ளோரின் ஏனைய 05 பொறியியல் தொழில் தொகுதிகள் தவிர, பொறியியல் தொழில்நுட்பவியலாளர் தொகுதிக்குரிய பொறியியல் தொழில்நுட்பவியலாளர்கள் நேரடியாக பொறியியல் பேரவையில் பதிவுசெய்தல் வேண்டும். இது சிக்கலான செயற்பாடாக இருந்ததுடன் ஆரம்பம் முதலே விளக்கமாவும் சரியாகவும் செயல்நடைமுறையொன் | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | று ஸ்தாபிக்கபடாதிருந்தமையால் எதிர்காலத்தில் அனேகமான செயல்ரீதியிலான பிரச்சிசனைகளுக்கு (operational problems) முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அதனால் இந்த செயல்நடைமுறையைத் தயாரிப்பதற்கு கவனத்தில்கொள்ளக்கூடிய காலம் எடுத்திருந்தது. தற்போது அந்த இலக்கு பூர்த்திசெய்யப்பட்டு பதிவுசெய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (v) | சட்டத்தின் அதிகாரம் (ஐ) | பொறியியல் தொழிலில் உள்ளோர் தொழிலை தவறாக பயன்படுத்துதல் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடாத்துதல் தொடர்பான செயல்நடைமுறையொன்று நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு தொழிலை தவறாக பயன்படுத்துதல் தொடர்பாக செயற்படவேண்டிய முறை இதுவரை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியல் தொழிலில் உள்ளோர் தொழிலை தவறாக பயன்படுத்துதல் தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் எந்தவொரு முறைப்பாடும் மீளாய்வாண்டில் கிடைத்திருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 396(ஈ) ஆம் இலக்க நிதிப் பிரமாணம் | வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சியிருந்த போதும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக உரித்தாளியிடம் விசாரணைசெய்து அரசாங்க வருமானத்திற்கு | எதிர்காலத்தில் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கும் போது இதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்திற்கு இணங்க ஓய்வுபெறச்செய்யப்படாத காசோலைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 10,557 பெறுமதியான 02 காசோலைகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,954,000 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 13,611,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,657,000 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த விழ்ச்சிக்கு பதிவுக் கட்டண அறவிடலுடன் ஒப்பிடும் போது பேரவையின் செலவினம் உயர்வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 12 சந்தர்ப்பங்களின் பொது ரூபா 681,444 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த கொள்வனவுச் செயற்பாட்டின் போது பெறுகைக் குழு நியமிக்கப்பட்டு உரிய பெறுகைகள் 2006 இன் பெறுகை வழகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது புதிதாக ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு கடமை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான கணனிகள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களை (Office equipment) விரைவாக தயாரித்து வழங்குதல் அத்தியவசியமான விடயமாக இருந்தது. இந்த பொருட்கள், அலுவலக உபகரணங்கள் வழங்கனரிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்யகூடியதாக இருந்தமையால் 2006 இன் பெறுகை வழகாட்டிக் கோவையின் 35 ஆம் இலக்க மேலதிகத்தின் (supplement 35) ஏற்பாடுகளுக்கு இணங்க தலைவருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் எல்லையின் கீழ் அந்த | பெறுகை வழகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

நிலையான சொத்துக்களின் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பொதுமுயற்சிகள் சற்றறிக்கையின் இலக்கம் 12 இன் 5 ஆவது பந்தியின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் பேரவைக்கு உரித்தான வகையில் ஆகக் குறைந்தது 03 வருட காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட வேண்டும். மேலும் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்டபடி தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரதிகள் வருடாந்த பாதீட்டு அறிக்கையுடன் ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன் வரிசை அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பவேண்டியிருந்த போதிலும் இலங்கை பொறியியல் பேரவையின் மூலம் 2020 ஆம் ஆண்டை உள்ளடக்கிய 03 வருட காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | பொதுமுயற்சிகள் சற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பொதுமுயற்சிகள் சற்றறிக்கையின் இலக்கம் 12 இன் 5 ஆவது பந்தியின் 5.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையினால் வருடாந்த பாதீட்டு அறிக்கை உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 06 மாதங்களுக்கு முன் தயாரிக்கப்பட வேண்டும். 5.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்டபடி தயாரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு அறிக்கை உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு அறிக்கையின் பிரதிகள் ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 நாட்களுக்கு முன் வரிசை அமைச்சு, பொதுமுயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பவேண்டியிருந்த போதிலும் பேரவையின் மூலம் மேற்கூறப்பட்ட பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | பொதுமுயற்சிகள் சற்றறிக்கையின் பிரகாரம் பாதீட்டு அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |